விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 16 செவ்வாய்க்கிழமை (02-10-2001) தொலைபேசி 3378 ஒலி 295

## முல்லைக் கடல் ஊடாக நவீனரக போர்ஆயுதங்கள்
### புலிகளுக்கு வந்து சேர்ந்தது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு கம்பீசிய நாட்டில் இருந்து பெருமளவு நவீன ரக ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டுமுல்லைத்தீவுப் பகுதியில் பாதுகாப்பாக இறக்கப்பட்டுள்ளதென சண்டே ரைம்ஸ் பத்திரிகைசெய்தி வெளியிட்டுள்ளது

பல்குழல் ரொக்கற் செலுத்திகள், விமான எதிர்ப்பு ஏவுகணைகள், ஆட்லறி செல்கள் மோட்டார்கள், அவற்றிற்குரிய செல்கள், மற்றும் கடற் புலிகளுக்கான விசேட ஆயுதத் தொகுதிகள் உட்பட பெருமளவு நவீன ஆயுதங்கள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான முல்லைத் தீவுக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்

(08ம் பக்கம் பார்க்க)

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியின் மகன் கொழும்பில் கொலை

(கொழும்பு

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியின் மகன் இனந்தெரியாதோரினால் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

களுபோவிலவிள்ள கொகுவல என்ற இடத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைத்தே இவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

முகமட் அலியின் இல்லத்திற்குச் சென்ற இனந்தெரியாதோர் இவரது கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை நடைபெற்ற இப்படுகொலைச் சம்பவத்தையடுத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலை தொடர்பாகப் பொலிசார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்

### அரசியல் நிர்ணய சபைக்கு
# பிரதிநிதியை தெரிவுசெய்வதில் தமிழ்க் கட்சிகளிடையே இழுபறி!

## ஓய்வுபெற்ற நீதியரசர் சுந்தரலிங்கம் நியமனமாகலாம்

(நமது நிருபர்)

**இம்மாதம் 5-ம் திகதிக்கு முன்னர் அரசியல் அமைப்பு சபை நிறுவப்படவிருப்பதால் பல்வேறு அரசியல் கட்சிகளும் தங்கள் தங்கள் சார்பான அங்கத்தவர்களை தெரிவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.**

**அரசியல் கட்சிகளைச் சேராத பத்து உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் அமைப்பு சபைக்கு சிறுபான்மை, தமிழ், முஸ்லிம் கட்சிகள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில் இழுபறி நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

பத்து உறுப்பினர்களைக் கொண்ட அரசின் நிர்ணய சபையின் சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மூன்று பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று நியமனங்களும் தமிழ் மக்களின் சார்பில் ஒருவரும், மலையகத் தமிழர்களின் சார்பில் ஒருவரும், முஸ்லிம்களின் சார்பில் ஒருவரும் இடம்பெறவுள்ளனர்.

தமிழ்க்கட்சிகளின் சார்பில் ஓய்வு பெற்ற நீதியரசர்

(08ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகரில் பாதுகாப்பு தீவிரம்

[கொழும்பு]

விகாரமாதேவி பூங்காவிற்கு அண்மையில் அதிசக்தி வாய்ந்த குண்டுகள் பொருத்தப்பட்டிருந்த தற்கொலை யானிகளின் அங்கிகண்டெடுக்கப்பட்டதையடுத்து, தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள்யாவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் பல முக்கிய வீதிகளில் பெருமளவு பொலிசார் நிறுத்தப்பட்டு வீதிச் சாதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தற்கொலைக் குண்டுதாரிகள் பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்களைஇலக்குவைத்து குண்டுத் தாக்குதல் நடத்தலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (வ)

## வேலையிழந்த 100 பேர் நாடு திரும்புவார்கள்

(கொழும்பு)

டுபாயின் ஆடைத்தொழிற்சாலைகள் இரண்டு மூடப்பட்டதன் காரணமாக வேலையிழந்த சுமார் 100 இலங்கையர்கள மீளவும் தாயகத்துக்கு அழைத்துவரப்பட இருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்து மாதங்களாக வேலையற்றிருந்த இவர்கள் அடுத்த வாரமளவில் இலங்கைக்கு அழைத்துவரப் படுவரென்றும் இவர்களை அழைத்து வரும் பணிக்கு இலங்கை வேலை வாய்ப்புப் பணியகம் 20 இலட்சம் ரூபாவை செலவிட வேண்டியுள்ளது என்றும் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் எல்.கே. ருகுணிகே தெரிவித்தார்.

## பயணச்சீட்டு நாளை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 4ந் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து திருமலை புறப்படும் சிற்றி ஒவ் றிங்கோ கப்பலுக்கான பயண இலக்கமும், பயணச்சீட்டும் நாளை புதன்கிழமை காலை 7மணி முதல் வழங்கப்படுமென நான் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

## வன்னிக்கான உதவிகளை அரசு நிறுத்தியுள்ளது
### கிளி. அரச அதிபர் ஆதங்கம்

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் படையினரால் விடுவிக்கப்படாத பகுதிகள் என்று காரணம் காட்டி அப்பகுதிகளுக்கு வழங்கப்படும் உதவிகளை அரசுஇடை நிறுத்தியிருப்பதாக கிளிநொச்சி அரச அதிபர் எஸ். ஐயாத்துரை தெரிவித்துள்ளார்.

[08ம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் சூடு பெண் மரணம்

(மட்டக்களப்பு)

மீன்பிடிவலையை வாவியில் போடுவதற்குச் சென்ற குடும்பப் பெண், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மீனவர் ஒருவர் இச் சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு வலையிறவு வாவிப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

சம்பவத்தில் மட்டக்களப்பு வவுணதீவைச் சேர்ந்த எஸ். மனோகரி (வயது-34) என்ற குடும்பப்பெண்ணே உயிரிழந்தவராவர். (இ)

## வளைகுடாவில் யுத்தம் வெடித்தால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்
### எச்சரிக்கிறார் பெற். கூட்டு.முன்னாள் தலைவர்

(கொழும்பு)

வளைகுடாப்பகுதியில் அமெரிக்கா தலைமையில் யுத்தமொன்று வெடிக்குமாயின் இலங்கை பாரிய எரிபொருள் நெருக்கடியைச் சந்திக்க வேண்டி வருமென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் டசான் விமலசேன தெரிவித்துள்ளார்.

மின்சார நெருக்கடி தொடர்பாக நேற்றுகொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் பேசுகையில்;

இலங்கைக்கான எரிபொருள் விநியோகம் வளைகுடாப்பகுதியூடாகவே இடம் பெறுகின்றது. எனவே அமெரிக்கா ஆப்கான்மீது தாக்குதல் தொடுக்குமாயின் இலங்கைக்கான எரிபொருள் விநி

(08ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வீடற்றவன்

அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதிய வீடற்றவன் நாவலின்விளக்கமும் விமர்சனமும். நூல், 10 ஆம் 11ஆம் தரங்களில்மாணவர்கள்விருப்பப்பாடமான தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும் ,50 பக்கங்கள் ரூபா 25.00:

[3598]

## பொலிஸார் காயம்

(கொழும்பு)

கடந்த சனியன்றுவவுனியாவில் வீதித்தடைஒன்றில் கடமையில் இருந்தபொலிஸாரை நோக்கி விடுதலைப் புலிகள் கைக்குண்டை வீசியதில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒருவரும், பொதுமகன்]ஒருவரும் காயமடைந்துள்ளனர்;

காயமடைந்த இருவரும் அநுராதபுரம் பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; (உ)

## மா விநியோகம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினால்''சஜிந்த''கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கோதுமை மா இறக்கும் பணிகள் நேற்று காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறையில்வைத்தே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த மா பகிர்ந்து வழங்கப்பட்டு வருவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன; (உ-223)

## கரணவாயில் திருட்டு

(துன்னாலை)

கரணவாய் கிழக்கு மணற்பகுதி வீடொன்றில் கடந்த சனியன்று இரவு புகுந்த கள்வர் கூட்டம் வீட்டிலிருந்த பெறுமதி மிக்க சொத்துக்களையும், அங்கிருந்தவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளையும் களவாடிச் சென்றுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்களைக் கத்தியைக் காட்டி மிரட்டியே இத்துணிகரச் சம்பவத்தைப் புரிந்ததாகத் தெரியவந்துள்ளது. (உ-41)

## உலக ஆன்மீக எழுச்சிப் பேரணியின் ஆன்மநேய ஒருமைப்பாட்டு

# அமைதி உலா இன்று கொழும்பில்

### நாடளாவியரீதியில் அமைதிப்பிரார்த்தனைக்கும்ஏற்பாடு

(கொழும்பு)

உலக ஆன்மீக எழுச்சிப் பேரணியின் ஆன்மநேய ஒருமைப்பாட்டு 'அமைதி உலா' இன்று இடம்பெறவுள்ளது.

கொழும்பு, முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் சமாதி கொண்டிருக்கும் யானைக் குட்டிச் சுவாமிகளின் ஆசியுடன் ஆரம்பித்து கொழும்பில் பிரதான வீதிகள் வழியாகச் சென்று அவர் வாழ்ந்திருந்த கப்பித்தாவத்தையில் அமைந்துள்ள கைலாயநாதர் ஆலயத்தில் இந்த உலா நிறைவுறும்;

யுத்தத்தாலும் மற்றும் பல காரணங்களாலும் துன்பத்துள் தள்ளப்பட்டுள்ள எமது வாழ்வு மறுமலர்ச்சி அடைதல் உள்ளிட்ட பல்வேறு சமுதாய மாறுதல்கள் வேண்டி இவ் உலா, ஆன்மீக சக்தியால் எதனையும் சாதிக்க இயலும் என உலகிற்கு வாழ்ந்து காட்டிய மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன்,

இத்தினத்தை 'உலக ஆன்மீக எழுச்சித் தினமாக' பிரகடனப் படுத்தவும், ஐக்கிய நாடுகள் சபைமுதலான சர்வதேச அமைப்புகளைக் கோரவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தவிரவும், இன்றைய தினத்தில் நாடளாவியரீதியில் சகல ஆலயங்களிலும் ஆலய மணிகளை ஒலிக்கச் செய்து, நண்பகல் 12.30 மணிக்கு உலக நலனுக்காகவும், மக்களின் துன்பங்கள் மறைந்து அமைதியும், இயல்பு நிலையும் ஏற்படுத்துவதற்காகவும் மக்களை ஒன்றுகூட்டி ஏககாலப் பிரார்த்தனைநடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது;

## காட்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக சிறுவர் - முதியோர் தின வாரத்தை முன்னிட்டு சகோதர ஐக்கிய உதைபந்தாட்ட ஒன்றுகூடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3. 30 மணிக்கு டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் அமரர் ஐயா: இராசரத்தினம் அரங்கில் நடைபெறவுள்ளது.

காட்சிப் போட்டியில் யாழ்; பல்கலைக்கழக உடற்கல்வித்துறை அணி எதிர் வதிரி டயமன்ட்ஸ் அணி மோதவுள்ளது. (உ-41)

## பதில் செயலராக சிறிசேனா

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளராக சிறிபால சிறிசேன நியமிக்கப்படவுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் சில தினங்களில் நடைபெறவுள்ளதால் அக் கூட்டத்தில் இந்நிலைமைதொடர்பானஇறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (வ)

## பெண்ணின் சங்கிலி திருட்டு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சுற்றித் திரிந்த இளைஞர்கள் இருவர், வயோதிப மாதுவின் தங்கச் சங்கிலியை அறுத்த சம்பவமொன்றுகடந்த29ஆம் திகதி சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றுள்ளது;

ஆலய தரிசனம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வயோதிப மாதுவின் ஒரு பவுண் தங்கச் சங்கிலியே இவ்வாறுதிருடப்பட்டுள்ளது. (உ- 106)

## அருணோதயாக் கல்லூரி அணி சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட 12 வயதுக்கு உட்பட்ட உதைபந்தாட்ட அரை இறுதியாட்டத்தில் அருணோதயக் கல்லூரி சம்பியனானது;

போட்டிகளின் விபரம் வருமாறு;

அருணோதயாக் கல்லூரி அணிக்கும் மல்லாகம் மகா வித்தியாலய அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் அருணோதயாக் கல்லூரி 6:0 என்ற கோல்கணக்கிலும் யூனியன் கல்லூரியை எதிர்த்தாடிய மகாஜனாக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றியீட்டி இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டன.

இறுதியாட்டத்தில் அருணோதயாக்கல்லூரி அணியும் யூனியன் கல்லூரி அணியும் ஆடியதில் 2:0 என்றகோல் கணக்கில்அருணோதயாக் கல்லூரி வெற்றியீட்டியது. (செ)

## கொட்டடியில் முழுநிலா நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூகநிலையத்தினால் நடத்தப்படும் ''முழுநிலா கலைநிகழ்ச்சி'' இன்று மாலை 6 30 மணியளவில் நிலைய கலை அரங்கில் தலைவர் பொ; சிறீராஜபுலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக முன்னாள் நிலையத் தலைவர் செஞ் சொற் செல்வன் இரா. செல்வவடிவேலும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசும். கௌரவ விருந்தினராக கொட்டடி கிராம அலுவலர் கி. மகாலிங்கமும் கலந்து கொள்வர். (ந-5)

## இறம்பைக்குள மாணவன் முதல் இடம்

(வவுனியா)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழிமூலம் றம்பைக்குளம் மகாவித்தியாலய மாணவன் அமிர்தலிங்கம் அமுதபவான் 186 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

1994 ஆண்டு நடைபெற்ற 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இவரது சகோதரியான அ. நிலக்ஷனா அகில இலங்கையில் தமிழ் மொழி மூல பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது; (வ)

## கல்வி அமைச்சிற்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளராகப் பணிஆற்றிய கலாநிதி தணிகாசலம் பிள்ளை கல்வி அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது;

அவரின் இடத்திற்கு தற்காலிகமாக வடமராட்சி கல்விப்பணிப்பாளர் எஸ்; சிவராசா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. தணிகாசலம்பிள்ளை அவர்கள் தன்னுடைய பொறுப்புக்களை இன்று சிவராசாவிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது: (எ-10,9)

## இராசி பலன்

2-10-2001

புரட்டாதி16 செவ்வாய்
பூரணை மு.இ 7.36
உத்தரட்டாதி மு இ10.33
இராகுகாலம் 3.02-4.32
சுப நேரம் 1032-12.02
அமிர்தசித்தம், பூரணை விரதம்

**மேடம்**

உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம், சுபகாரிய செலவு, பிரயாணம்;

**இடபம்**

காரிய அனுகூலம், தனலாபம், குடும்ப மகிழ்ச்சி, கற்பனை மிகுதி;

**மிதுனம்**

நல்ல செய்தி, தொழில் விருத்தி முயற்சி கைகூடும், பிறர் உதவி;

**கடகம்**

தொழில் சிறப்பு, இலட்சுமிகரம், வீண் பயம், காரிய ஜெயம்;

**சிங்கம்**

வியாதி, வீண்தொல்லை, காரியதாமதம், மனக் குழப்பம்.

**கன்னி**

அபூர்வ சந்திப்பு, சென்ற இடத்தில் செல்வாக்கு, சுபலாபம், திடீர் பயணம்.

**துலாம்**

போசன சுகம், நினைத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, நோய்குணமடைதல்.

**விருச்சிகம்**

குடும்பத்தில் மனஸ்தாபம், தொழில் நன்மை, தாழ்வு நிலை' முயற்சி தாமதம்

**தனுசு**

மனச் சஞ்சலம், தர்ம காரிய தாமதம், வீண் கவலை

**மகரம்**

அந்நியர் சந்திப்பு, நல்ல முயற்சி, சந்தோசம், தன வரவு

**கும்பம்**

பொருள் விரையம், காரிய தாமதம். வார்த்தை பலிக்காமை, திடீர் நன்னை,

**மீனம்**

உறவினர்வருகை செல்வாக்கு ,நல்ல முயற்சி போசன சுகம்;

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

## வட இலங்கை சங்கீதசபை பரீட்சைகள் - 2002

வட இலங்கை சங்கீத சபையின் 2002ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 2001. 10. 05 முதல் விற்பனைக்கு வரும். முடிவுத் திகதி 2001. 12. 10 விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா 20. 00.

விண்ணப்பப்படிவத்தைத் தபால் மூலம் பெற விரும்பும் தேர்வு நாடிகள் ரூபா 20. 00 பெறுமதியான அஞ்சற் கட்டளை (Money Order) உடன் ரூபா 3. 50 பெறுமதியான தபாற் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10 செ. மீ 22செ; மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வு நாடிகள்

வட இலங்கை சங்கீத சபை,
கல்வித் திணைக்களம்,
செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் இடத்தில் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.

வட இலங்கை சங்கீத சபை,
யாழ். கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(C/ 2670)

## பின்லேடனின் சகா இலங்கைக்குள் நுழைவு?

[கொழும்பு]

அமெரிக்க நகரங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலை விமானத்தாக்குதலின் சூத்திரதாரியாக சந்தேகிக்கப்படும் சர்வதேச தீவிரவாதியான ஒஸாமா பின்லேடனின் நெருங்கிய சகா ஒருவர் இலங்கைக்குள் நுழைந்திருப்பதாக இரகசியத் தகவல்ஒன்று தெரிவிக்கின்றது.

இதனையடுத்து அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையின் (சி.ஐ.ஏ)உயர்அதிகாரிகள் கொழும்பு வந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன;

கட்டுநாயக்கா விமானநிலையம் தீவிர பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் பின்லேடனின் நெருங்கிய சகாவான ஹாஜி மலிக் எப்படிக் கொழும்புக்கு வந்திருக்கமுடியும் என்ற கேள்வியும் பாதுகாப்பு பிரிவினர் மத்தியில் எழுந்துள்ளது.

ஒஸாமா பின்லேடனின் சகாவான ஹாஜி மலீக் பாகிஸ்தான் கடவுச்சீட்டுடன் கொழும்புக்குள் நுழைந்திருக்கலாம் என ஒருதகவல் தெரிவித்திருந்தபோதும்; ஹாஜிமலீக் கொழும்பு வரும்வழியில் ஹொங்ஹொங்கில்வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

இதனையடுத்து கட்டுநாயக்கா விமானநிலையத்தின் பாதுகாப்பும், விமானப்பயணிகளின் சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது; (வ)

வல்லிபுர ஆழ்வார் உற்சவத்தை ஒட்டிய கவிதைகள்.

## மேகவண்ணத்தாய்போற்றி

யாதவ குலத்துக் கண்ணா! யாழ்குடா நாட்டின் கீழ்பால்
ஆதவ னுதித்தா லென்ன, ஆலமுங் கடலுஞ் சூழ்ந்த
ஓதரு சிறப்பின் வல்லி புரத்தெழுந் தருளுங் கண்ணா!
மேதகு கீதை சொன்ன மேகவண் ணத்தாய் போற்றி

பார்த்தசா ரதியாய் அன்று பாரதப் போரில் நின்று
மூர்க்கனாந் துரிய னாதி மன்னரும் மற்று ளோரும்
ஆர்த்தெழு படையும் மாள ஐவருக் கரசு நல்கிக்
காத்தனை கண்ணா! ஈழத் தமிழருக் கருள்வாய் போற்றி

நா. நல்லதம்பி
மட்டுவில்

## துயர் களைவாய்

மண் மலைமேல நடந்தோமையா அன்று
மன்றாடி நின்வரம் கேட்கின்றோம்
எண்ணுகிறோம் உன்னையே எந்நாளும்
எம்மவர் துயரென்றும் களைவாயே.

ஐ. யோகேஸ்வரன்
தேவரையாளி

# அதிபர்களின் அசமந்தப் போக்கால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணனிகள் பாவனையின்றி முடக்கம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணனிகள் பயன்படுத்தப்படாத நிலையில் பாடசாலை நிர்வாகங்களினால் இன்னமும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளமை பற்றி அண்மையில் தெரிய வந்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் கணனி அறிவை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெறவும் அதன் மூலம் நவீன அறிவியல் தொழில் நுட்பத்தினைக் கற்றுக் கொள்ளவழி வகுக்கும் பொருட்டே இக் கணனிகள் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு பல்வேறு தரப்பினாலும் வழங்கப்பட்டன.

எனினும், மாணவர்களின் பயன் பாட்டுக்கு அவை வழங்கப்பட்டால் அவற்றுக்கு ஏற்படும் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புச் செலவினங்களை யார் பொறுப்பேற்பது என்பதுடன்,

அவற்றின்பயன்பாட்டினை மாணவர்கள். மற்றும் ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் மிகவும் குன்றிக்காணப்படுவதாகவும் அறியப்படுகிறது.

(உ-77)

## 29-வது நிறைவு விழாவும் விளையாட்டும்

(மந்திகை)

இமையாணன் இளங்கோ சனசமூகநிலையத்தின் 29-வது நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் எதிர்வரும் 6 ஆம், 7 ஆம்திகதிகளில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 6 ஆம்திகதிசைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் ஆகிய நிகழ்வுகளும், 7 ஆம் திகதி மைதான நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு பருத்தித்துறை பிரதேசசபை உபதலைவர் ப. இரவீந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

(செ-23)

## கலட்டி ஐக்கிய வி.க. வெற்றியீட்டியது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிறன்று கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்றது.

டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை 4: 1 என்ற கோல் அடிப்படையில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

சிறந்த விளையாட்டு வீரராக கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பா. யசீந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

(உ)

## தொழில்நுட்பக்கல்லூரி பெயர்ப்பலகை விரைவில் திறந்து வைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம்தொழில்நுட்பக்கல்லூரியின் புனரமைப்புப் பணிகளவடக்குபுனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மிகத்துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு புனரமைக்கப்பட்ட வற்றில் நுழைவாயில் பாதுகாப்பு உத்தியோகத்தர் தங்குமிடம், பெயர்ப்பலகை என்பன விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன.

(உ-106,19)

## வடமராட்சி கடற்பரப்பில் கைவிடப்பட்டவலைகளை மீட்க படையினர் அனுமதி

(மந்திகை)

வடமராட்சி கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட கடற்பகுதியில் கைவிடப்பட்ட வலைகளை மீட்பதற்கு படையினர் நேற்றுமுன்தினம் அனுமதிவழங்கியுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர்மாதம் 1ஆம் திகதி பருத்தித்துறைக் கடலில் நடைபெற்ற அசம்பாவிதத்தினை அடுத்து அக் கடலில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதே வேளைகடந்த27ஆம் திகதி இன்பருட்டி கிழக்கிலிருந்து கற்கோவளம்வரைமீன் பிடிக்க அனுமதிக்கப்பட்ட போது, இன்பருட்டி மேற்கிலிருந்து தொண்டைமானாறு வரை மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(செ-23)

## நிவாரணப் பொருட்களின் தரம் பற்றிய மக்கள் கருத்து திரட்ட பணிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால்வழங்கப்படும் உலர் உணவுநிவாரணப் பொருட்களின் தரம்பற்றியும் விநியோகிக்கப்படும் அளவு பற்றியும், மக்களின்அபிப்பிராயங்களைத் திரட்டித் தரும்படி வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை வழங்கியுள்ளார்.

இவ்வாறான அபிப்பிராயங்களைத் திரட்டும் பணியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களும், அபிவிருத்தித்தொண்டர்களும் இவ் வாரத்தில் ஈடுபடவுள்ளனர்.

இவர்களின் பணிக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்படி உலர் உணவு நிவாரணம் பெறும்அனைத்துக்குடும்பங்களையும் அமைச்சர் கேட்டுள்ளார்.

அத்துடன்உலர்உணவுநிவாரத்துக்காக வழங் பபடும் பொருட்களுக்குபதிலாகவழங்கக்கூடிய வேறு உணவுப் பொருட்கள் பற்றிய சிபார்சுகளையும், உலர் உணவுவிநியோகத்தைச் செம்மைப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படக்கூடிய சீர்திருத்தங்கள் பற்றியஆலோசனைகளை தெரிவிக்கும்படியும்,

உலர் உணவு விநியோகத்தின் மூலமாக வழங்கப்படும் அரசாங்கத்தின் சேவைகள் உரியவர்களுக்கு உரிய முறையில் உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதிப்படுத்தவே இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் அமைச்சர் சம்பந்தப்பட்டவர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.

(உ)

## அளவெட்டியில் திருட்டு

(அளவெட்டி)

அளவெட்டிமாசியப்பிட்டிப் பகுதியில் கடந்த சனியன்று இரவு இரு இடங்களில் கள்வர்தம் கைவரிசையைக்காட்டிச் சென்றுள்ளனர்.

பிரதான வீதியில் அமைந்துள்ள 'துரைஸ்ரோரை' உடைத்து உள்நுழைந்த திருடர் குழு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும், தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றினுள் பூட்டி வைக்கப்பட்டிருந்த இரு சைக்கிள்களையும் களவாடிச் சென்றுள்ளனர்.

(உ-237)

## திருநெல்வேலி றோ. க. த. க பாடசாலைக்கு வசதிகள் திருப்திகரமாய் இல்லை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி றோ.க.த. க. பாடசாலை பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தளபாடங்கள் மற்றும் மலசல கூட வசதிகள் இல்லாமையால் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களுக்காளாகி வருகின்றனர்.

அத்துடன், புதிய பாடத்திட்டத்திற்கமைய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இப் பாடசாலைக்கு மைதானம் இல்லாமையினால், சிறுவர்களை வழிநடத்துவதிலும் அவர்களின உளச் செயற்பாடுகளை சீராக்குவதிலும் சிரமம் ஏற்படுவதாக அதிபர் திருமதி க. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அண்மையில் வடக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு, புனரமைச்சு அமைச்சினால் 3 இலட்சம் ரூபா இப் பாடசாலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும் ஏனைய தேவைகள குறித்து பாடசாலை அபிவிருத்திச் சபையினர் நல்லூர் பிரதேச சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-106, 19)

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

(சுண்டுக்குளி)

யாழ். சென் சாள்ஸ் வித்தியாலய 125 ஆவது நிறைவை முன்னிட்டு, வித்தியாலயத்தின் பழைய மாணவர்சங்கம், 15 வயதிற்குட்பட்ட யாழ். மாவட்ட கழக அணிகளுக்கிடையே 7 வீரர்கள் பங்குபற்றும் 12 பந்து மாற்றங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்றினை வித்தியாலய மைதானத்தில் நடத்தி வருகிறது.

இவ்விதம் 15 வயதிற்குட்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்று யாழ் மாவட்டத்தில் நடத்தப்படுவது இது முதலாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் 37 கழக அணிகள் கலந்து கொள்கின்றன.

(உ-110)

## 500 மெற்றிக் தொன் யூரியா உரம் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணமாவட்டத்தில் விவசாயிகளின் பாவனைக்கென யூரியா உரம் எடுத்து வரப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களம் யூரியா உரத்தை எடுத்து வருவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் சில குறுக்கீடுகளால் தடைப்பட்டதையடுத்து;

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு மேற்கொண்ட முயற்சியினால் தற்போது 500 மெற்றிக் தொன் யூரியா உரம் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக அந்த யூரியா உரம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

(உ)

## இலவச கண் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, இணுவில், மானிப்பாய் பரிஷ், கொக்குவில் லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் கண் பரிசோதனை முகாம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (செ)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ம்றபர் மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 205305 பி | 205336 ஏ |
| 205336 பி | 205386 ஏ |
| 205424 ஏ | 205456 ஏ |
| 205464 ஏ | 205563 ஏ |
| 205563 பி | 205563 சி |
| 205587 ஏ | 205596 ஏ |
| 205596 பி | 205596 சி |
| 205601 ஏ | 502355 ஏ |

### சங்கானை

| | |
|---|---|
| 194424 ஏ | 194424 பி |
| 194424 சி | 195074 ஏ |
| 195074 பி | 195922 ஏ |
| 195922 பி | 199458 ஏ |
| 199458 பி | 199462 ஏ |
| 199462 பி | 199462 சி |
| 199462 டி | 199463 ஏ |
| 199463 பி | 201528 ஏ |
| 201528 பி | 201528 சி |
| 201528 டி | 201528 ஈ |
| 202034 ஏ | 202034 பி |
| 202157 ஏ | 202157 பி |
| 203420 ஏ | 203497 ஏ |
| 203546 ஏ | 203574 ஏ |
| 203574 பி | 203574 சி |
| 203575 ஏ | 203653 ஏ |
| 203677 ஏ | 203677 பி |
| 204505 ஏ | 204505 பி |
| 204505 சி | 205305 ஏ |

### யாழ்ப்பாணம்

198691 ஏ

### நால்லூர்

| | |
|---|---|
| 194869 ஏ | 198872 ஏ |
| 199504 ஏ | 199504 பி |
| 195504 சி | 201821 ஏ |
| 201821 பி | 201898 ஏ |
| 201898 பி | 201920 ஏ |
| 201920 பி | 201987 ஏ |
| 203695 ஏ | 203696 ஏ |
| 203766 ஏ | 203766 பி |
| 203867 ஏ | 203867 பி |
| 203867 சி | 203867 டி |
| 203895 ஏ | 203895 பி |
| 203895 சி | 205310 ஏ |
| 205310 பி | 205620 ஏ |
| 205620 பி | 205620 சி |
| 205620 டி | |

(தொடரும்)

## சுகவாழ்வு

தன்னினச் சேர்க்கையில் தொற்றுள்ள ஒருவருடன் ஈடுபடுதலும் உங்களை எச். ஐ. வி. தொற்றிற்கு/ எயிட்ஸ் நோய்க்கு ஆளாக்க வாய்ப்புண்டு. ( எயிட்ஸ் வருமுன் காப்போம்.)

தரிசனம்

# நம்பிக்கையில்லாப் பிரேரணைதவிர
# ஐ. தே. கவுக்கு வேறுவழியில்லை

## அமைச்சர் ஜயரத்தின கிண்டல்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக ஐ.தே.கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை, எந்த நேரத்திலும் தாம் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக, பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான டீ. எம் ஜயரத்தின சவால் விடுத்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதைத் தவிர ஐக்கிய தேசியக் கட்சியால் வேறு எதையும் செய்ய முடியாதெனக் கிண்டல் செய்த ஜயரத்தின மேலும் தெரிவிக்கையில்;

எதிர்க் கட்சிகள் அனைத்தினதும் ஆதரவை அவர்களால் பெற்றுக் கொள்ள முடியாதெனக்கூறினார்;

இதேவேளை அமைச்சர் மகிந்த ராஜபக்ச நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து தெரிவிக்கையில்;

தற்போதுள்ள சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணைகொண்டு வந்தமை சிங்கள மக்களுக்குச் செய்த மாபெரும் துரோகமெனக் குற்றம் சாட்டியுள்ளார், (வ-இ)

## இல. செஞ்சிலுவைச் சங்க யாப்பு சீர்திருத்தம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாப்புகள் சீர்திருத்தம் செய்தல் தொடர்பான கூட்டம் ஒன்று அண்மையில் தம்புள்ளையில் ஹல்தா கிளப்பில்இலங்கைச்செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஆரியரட்ண தலைமையில் நடைபெற்றது;

இக் கூட்டத்தில் இலங்கையின் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பத்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்;

யாப்புத் திருத்தம் ஆராயப்பட்டு சில திருத்தங்களுடன் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது;

யாப்பு திருத்தக் குழுவில் பேராசிரியர் வி கே கணேசலிங்கம் பொறுப்பான பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. [உ-106]

### பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு
## நாளாந்தம் 50 ரூபா வழங்க அமைச்சர்பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் வாழும் கடற்றொழிலாளர்கள் தமது கஷ்ட நிலைமையிலிருந்து விடுபடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொழிலுக்கு செல்ல முடியாமல் இருக்கும் மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் தொழிலை இழக்கும் ஒவ்வொருநாளுக்கும் தலா ஐம்பது ரூபா என்ற வீதப்படி வழங்கப்படவேண்டும்.

இவ்வாறுஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்,

அத்துடன் குறித்த மீனவர்களின் பிரச்சினைக்கு எதிர்வரும் இருவாரங்களுக்குள் சுமுகமான தீர்வு ஒன்றைக் காண நடவடிக்கைஎடுப்பதாகவும் உறுதி மொழி வழங்கியுள்ளார்,

வடமராட்சி மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சரை சந்தித்து தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கஷ்ட நிலைமைகள் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்ததுடன்,கடந்த சுமார் இருபது நாட்களுக்கும் மேலாக தொழில் செய்ய முடியாதஇக்கட்டான சூழல் தோன்றியிருப்பது குறித்தும் தத்தம் குடும்ப நிலைமைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்த தன் பேரிலேயே அமைச்சர் மேற்படி பணிப்பினை விடுத்துள்ளார்; (உ)

### வாகன உதிரிப்பாக
## விற்பனை நிலையத்தில் லட்சத்திற்கு மேல் கொள்ளை

(கொழும்பு)

பொலிஸார் எனக் கூறிக் கொண்டு வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்றிற்குள் நுழைந்த ஆயுதக் கோஷ்டியொன்று ஒரு லட்சத்து 26 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளது;

இச் சம்பவம் நேற்று அதிகாலை 3 00 மணியளவில் தெல்தெனிய பொலிஸ் பிரிவிலுள்ள திகன நகரில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி தெல்தெனிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்; (செ)

### சபாநாயகர்
## அனுரா பண்டாரநாயக்கா ஒருதுணிவில்லாதகோழை
### ரவி கருணாநாயக்கா இப்படி பரிகாசம்

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா ஒரு துணிவில்லாத கோழை.அவரை நான் நீதிமன்றில் சந்திக்கத்தயார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாவட்ட எம். பி. ரவி கருணநாயக்கா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அனுருத்த ரத்வத்த பெற்றோர்வழி மரபு பற்றிக் கூறியதற்காக நீதிமன்றம் செல்லப்போவதாகக் கூறிப் பிரபலமடைந்த அனுரா ஏன் இன்று வரை நீதிமன்றம் செல்லவில்லை. ரத்வத்த மீதான நீதிமன்ற நடவடிக்கைக்கு என்ன நடந்தது.

அனுரா நீதிமன்றுக்கு செல்லத்தயார் என்றால் ஐ தே: கட்சி பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் கூறிய குற்றச் சாட்டுக்களுக்கு ஆதாரங்களை காண்பிக்க நாம் தயார்;

அனுரா,தாய் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் சகோதரி சந்திரிகாகுமாரதுங்கவுக்கும் எதிராக சதித்திட்டம் தீட்டியவர்; இவரது பழைய உதவியாளர்கள் இத்திட்ட வகுப்புக்கு சாட்சி கூறுவர்;

ஐ:தே: கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க நோர்வேயில் இருந்த காலத்தில், அவரை அகற்ற சதி நடப்பதாக தவறான தகவல் கொடுத்தவர்.

தனது வீட்டுப் பணியாளர்களை தனது உத்தியோக பூர்வ வெளிநாட்டு விஜயத்தின் போது போலி விபரங்களைக் கொடுத்து அழைத்துச் சென்றவர்;

இத்தகைய தவறுகளைமேற்கொண்ட அனுரா நீதிமன்ற குறுக்கு விசாரணைக்கு முகம் கொடுப்பாரா எனரவிகருணா நாயக்கா எம்.பி அடுக்கடுக்காய் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார்; [இ]

## பரிசோதகர் பரீட்சை 3 தமிழர்கள் சித்தி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தபால் திணைக்களத்தால் நடத்தப்பட்ட நுண்ணாய்வு பரிசோதகர்களுக்கானபரீட்சையில்மூன்று தமிழர்கள்சித்தியடைந்துள்ளனர்.

எம்.புஷ்பநாதன்(முல்லைத்தீவு தபாலகம்) எஸ். ஜெபரட்ணம் (யாழ். பிரதம தபாலகம்) எஸ். சுப்பிரமணியம் (யாழ். பிரதம தபாலகம்)

ஆகியோரே மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்களாவர்; (உ-106)

---

மகாத்மா காந்தியின் நினைவு தினம் இன்றாகும்;

### மகாத்மாவின் கருத்துக்கள்

★ கற்களால் கட்டப்படும் கோயில்களை விட நரம்பாலும் தசையாலும் கட்டப்பட்டுள்ள மனித உடல்களே உண்மையானகோயில்கள்.

★ ஒருவருடைய பெருமை அவருடைய பணத்தையும் அந்தஸ்தையும் பொறுத்தது அல்ல; அவருடைய குணத்தையும்நடத்தையையுமே பொறுத்திருக்கிறது.

★ நியாயத்திற்காகப் போராடுகிறவர்கள் பிறரிடம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

★ அழகு தூய நடத்தையில் இருக்கிறதேயன்றி ஆபரணங்களை அணிவதில் இல்லை.

★ மனிதனிடம் இருக்க வேண்டியது அன்பும் அனுதாபமும்.

---

# செய்தித் துளிகள்

## சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயஆரம்பபிரிவு மாணவர்களுக்குகடந்தவெள்ளிக்கிழமை பிஸ்கட், பால்மா முதலிய சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன;

(செ-223)

## எழுத்தாளர் நினைவு நன்கொடை

(மீசாலை)

எழுத்தாளர் பாரதிநேசனின் நினைவு தினக் கூட்டம் அண்மையில் யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பாரதி நேசனின் மனைவி மேற்படி வித்தியாலயத்திற்குதனதுகணவனின் நினைவாக 5 ஆயிரம் ரூபாவை வழங்கினார்.

(எ-229)

## வீடு தீயில் எரிந்து நாசம்

[யாழ்ப்பாணம்]

நாவற்குழியில் இருந்து இடம் பெயர்ந்து நவாலி வடக்கில் வசித்து வந்த மார்க்கண்டு கோடீஸ்வரன் (பாபு) என்பவரது வீடு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

பழைய பகை காரணமாக விஷமிகள் சிலரே இவ்வாறு வீட்டிற்குத் தீமூட்டியதாகக் கூறப்படுகிறது.

இச் சம்பவத்தின் போது வீட்டில் இருந்த சொத்துக்களும் எரிந்து நாசமாகியுள்ளன. (உ)

## உடைமைகளை விட்டுச் சென்ற திருடன்

(யாழ்ப்பாணம்)

சாவற்காட்டுப் பகுதியில் உள்ள வீடொன்றில் திருடச் சென்ற திருடன் ஒருவன் சிறைச்சாலையில் இருந்துவிடுதலை செய்யப்பட்டதற்கான எழுத்துமூலமான சான்றையும தனது சைக்கிளையும் மற்றும் திருட்டுப்பொருட்கள் சிலவற்றையும் அந்த வீட்டிலேயே விட்டுச் சென்றுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ)

## சேவைக் கால செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான சேவைக் காலச் செயலமர்வுகள் பின்வரும் தினங்களில் நடைபெறுமென தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார்;

7-11ஆம் தரங்களுக்கான விஞ்ஞானம் செயல்முறை, 10ம, 11ம் தரங்களுக்கான மனைப்பொருளியல் ஆகியன இன்று செவ்வாய்க்கிழமை யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். தரம்10, தரம்11 ஆகியவற்றுக்கு தமிழ், கணிதம்,விஞ்ஞானம், சமூகக் கல்வி, வணிககல்வி ஆகிய பாடங்கள் தொடர்பான பாடசாலை மட்ட கணிப்பீட்டு செயலமர்வு 7ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், தரம்10,தரம்11 ஆகியவற்றுக்கான ஆங்கில பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயலமர்வு 13ஆம் திகதி சனிக்கிழமை யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன; (எ- 229)

## பிரிட்டன்விஸா கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

பிரிட்டனிற்கு செல்வதற்கான விஸா கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளதாக பிரிட்டனின் இலங்கை தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன;

அந்நியசெலாவணியில் ஏற்பட்டுள்ள மாற்றம்காரணமாகவே விஸாகட்டண அதிகரிப்பு ஏற்பட்டதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன: (உ-2)

## 75 ஆயிரம் அபராதம்

(மந்திகை)

நூறு லீற்றர் கோடா வைத்திருந்தார் என்ற குற்றத்தின் பேரில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் சதீஸ்குமார் என்பவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

மேற்படி நபர் வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்தவராவார்;

(எ-23)

## பாலம் சேதம் மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள ஒழுங்கை ஒன்றினை இணைக்கும் பாலம் நீண்ட காலமாகச் சேதமடைந்த நிலையிலேயே உள்ளது;

இதனால் அப்பாதையால் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் அந்த இடத்தில் விபத்துக்களைச் சந்திக்க நேரிடுகின்றது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்: (செ-19)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(தென்மராட்சி)

வட பிராந்திய மக்கள் வங்கியின் அலுவலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை வங்கி ஓய்வூதியர் நலன் புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் வருமாறு;

தலைவர் ஆர்.சுந்தரலிங்கம், உபதலைவர்கள்: பி.பாலசிங்கம்,எஸ்.வேதநாயகம் கே. விமலசிங்கம்,இணைச் செயலாளர்கள் எம். மகேந்திரம், ஏ.இராசநாயகம், பொருளாளர் எஸ்.தர்மராஜேஸ்வரன், உதவிப் பொருளாளர் ஏ.கோபாலகிருஸ்ணன் மற்றும் ஆறுபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (உ-77)

## ஆசிரியர் தினநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வலிகாமம் தீவக வலயங்கள் இணைந்து நடத்தும் ஆசிரிய தினம் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

[செ-9]

## ஈரான் பயணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் உப தலைவர் கு,பாலகிருஷ்ணன் செஞ்சிலுவைச் சங்க நடைமுறைகள்பற்றிய கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக அண்மையில் ஈரான் பயணமானார்; (உ-106)

## இன்று ஒரு தகவல்

# பேசும் கணிப் பொறிகள்

ஒரு குடும்பத் தலைவர் மிகவும் சோகமாக வந்திருந்தார். 'எனக்குக் குடும்பத் தலைவன் என்று பெயரே தவிர நான் கூப்பிட்ட குரலுக்கு ஏன்? என்று கேட்பதற்குஎங்கள் வீட்டில் யாருமே தயாராக இல்லை' என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார். அவருக்கு வீட்டில் எவ்வளவு மரியாதை என்பதை நன்றாகப் புரிந்து கொண்டேன். வீட்டுக்கு வீடு வாசற்படி என்பது அவருக்குத் தெரியவில்லை. அதனாலேதான் அதிகமாகக் கவலைப்படுகிறார். அவரை உட்கார வைத்து ஆறுதல் சொன்னேன்.

இப்போது என்ன வேண்டும் உங்களுக்கு? கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க வேண்டும்! நீங்கள் சொல்கிறபடி கேட்டு நடக்கவேண்டும்! அவ்வளவுதானே என்றேன். 'ஆமாம்' என்றார். கொஞ்சம் பொறுங்கள்! அதுமாதிரி ஒரு கம்ப்யூட்டர் வரப்போகிறது. அதன் பின்னர் நீங்கள் தான் ராஜா! உங்கள் வார்த்தைக்கு அதன் பின்னர் ஒரு தனி மரியாதை கிடைக்கப்போகிறது பாருங்கள் என்றேன். நிஜமாகவா என்றார் மிக ஆர்வமாக! 'ஆமாம்' என்று சொல்லிவிட்டு அது பற்றிய விபரங்களை அவருக்குச் சொன்னேன். நீங்களும் தான் கேட்டு வைத்துக்கொள்ளுங்கள். உங்களிலும் பலருக்கு இது ஒரு ஆறுதலான செய்தியாக இருக்கும்.

அமெரிக்காவில் வடகரோலினாவிலே, டியூக் பல்கலைக் கழகத்திலுள்ள ஆராய்ச்சியாளர்கள் சிலர் சேர்ந்து இப்படியொரு கம்ப்யூட்டரைத் தயாரித்திருக்கிறார்கள். குரல் மூலமாகவும், தொடுகை மூலமாகவும் இனம் கண்டு கொண்டு அதற்கு ஏற்றமாதிரி இயங்கக் கூடிய கம்ப்யூட்டர் முறை ஒன்றை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்! அதன் பின்னர் சில அறிவுபூர்வமான கம்ப்யூட்டர் முறைகளையும் உருவாக்கியிருக்கிறார்கள். அதில் முக்கியமானது இந்தகுரல் தொடர்பு முறை. இதை சுருக்கமாக V1PS முறை என்று சொல்கிறார்கள். இதில் சுமாரான எண்பது கட்டளைச் சொற்கள் அடங்கிய அட்டவணை ஒன்று தயார் செய்திருக்கிறார்கள். அந்த அட்டவணையைக் கம்பியூட்டருக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்தவார்த்தைகளைப் பயன்படுத்தி நீங்கள் உத்தரவு போடலாம். உங்கள் உத்தரவு கேட்டு அந்தக் கம்பியூட்டர் அதன்படி நடக்கிறது.

நீங்கள் எப்படிஉத்தரவு போடுவது என்று ஒருமுறை இருக்கிறது. உங்கள் ஒவ்வொரு கட்டளையும் 'இப்பொழுது' என்கிறவார்த்தையுடன் ஆரம்பிக்கவேண்டும். 'முடிந்தது' என்கிற வார்த்தையுடன் முடிக்கவேண்டும். அதாவது ஆங்கிலத்தில் Now என்று ஆரம்பித்துOver என்று முடியவேண்டும். இந்த இரண்டு வார்த்தைகளுக்கு மிடையில் உங்கள் கட்டளையை இட்டு நிரப்பலாம்.

அதுசரி! நாம் சொல்வதை அது எப்படிக் கேட்கிறது அதற்குக் காது இருக்கிறதா? என்று கேட்கிறீர்கள். அதில் ஒருமைக்ரோபோன் இருக்கிறது. அதில் நீங்கள், பேசவேண்டும். உங்கள் உத்தரவைக் கேட்டதும் 'விட்ஸ்' கம்பியூட்டர் இரண்டு கட்டமாகச் செயற்படுகிறது. அதாவது குரலைப் புரிந்துகொள்கிறது ஒன்று, மொழியை இன்னொன்று புரிந்துகொள்கின்றது. அதில் அடையாளம் அறியும சாதனமொன்று இருக்கிறது. நீங்கள் பேசுகிற வார்த்தைகளை,கம்பியூட்டர் நினைவில் ஏற்கனவே பதிவு செய்து வைத்திருக்கிற வார்த்தைகளோடு ஒப்பிட்டுப்பார்க்கிறது. அதன்பின்னர் கம்பியூட்டர் புரிந்துகொள்கிற சமிக்ஞைகளாக அதை மொழி பெயர்க்கிறது.பின்னர்உங்கள் உத்தரவு உடனே நிறைவேறுகிறது.

இதைக் கேட்டவுடன் நம்மிடம் வந்திருந்த குடும்பத்தலைவருக்கு மிகவும் திருப்தி. 'சீக்கிரம் வரட்டும்சார் அந்தக் கம்ப்யூட்டர்' என்றார். நாங்கள் பேசிக்கொண்டிருந்ததையெல்லாம் கேட்டுவிட்டு இன்னொருவர் அம்மா வந்தார்கள். அவர் ஒரு குடும்பத்தலைவி. 'எங்கள்வீட்டில் இந்தப்பிரச்சினையே இல்லை' அவர் கூப்பிட்ட குரலுக்கு நான் ஏனென்று கேட்கிறேன் அவர் என்ன சொன்னாலும் ஏன்? எதற்குஎன்று கேட்க மாட்டேன். உடனே செய்து விடுவேன். தர்க்கம் செய்ய மாட்டேன்' என்றார்கள். அதனால் உங்களால் முடிகிறது? என்றேன். 'அவரிடம் பேசி அவஸ்தைப் படுவதைவிட பேசாமல்செய்து முடிப்பது மேலானது' என்றார் □

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஆயுதக் கொள்வனவில்

# தொடர்ந்தும் இடம்பெறும் ஊழலை தடுக்க விரைவில் குழு அமைப்பு

(கொழும்பு)

ஆயுதக் கொள்வனவில் இடம்பெறும் ஊழலை தவிர்க்கும் வகையில், அதற்குப் பொறுப்பான குழுவொன்றை நியமிக்கவென பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் ஜே.வி.பியினதும் தூதுக்குழுக்கள் விரைவில் சந்திக்கவுள்ளன.

இச் சந்திப்பின்போது, ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கென தனியான ஒரு குழு உருவாக்கப்படவுள்ளது.

புதிதாக அமைக்கப்படும் இக் குழு, இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கும் நாடுகள் மற்றும் முகவர்களுடன்பேச்சுவார்த்தையில்ஈடுபட்டு சாதகமான நிபந்தனைகளுடன், மிகவும் பொருத்தமான ஆயுதங்களை கொள்வனவு செய்யும்.

இதேவேளை, அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், ஊழல் ஒழிப்பு நடவடிக்கை முதன்மை பெறுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இப்புதிய குழு அடுத்த வாரம் உருவாக்கப்படவேண்டும்.

இந்தவகையில் ஒக்டோபர் 5 ஆம் திகதிக்கு முன்னர் இக் குழு அமைக்கப்பட்டுவிடுமென ஜே.வி.பி. எம்.பி அனுரா திஸநாயக்கா தெரிவித்துள்ளார். (இ)

# நுளம்புகள் பெருக்கம்

(கொழும்புத்துறை)

அண்மையில் பெய்த மழையை அடுத்து குடாநாட்டில்நுளம்புத் தொல்லை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இதனால் மலேரியா,மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுவதற்கானஏதுநிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-223)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தலைமையகத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஒவ்வொரு மாவட்டக் கிளையில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட பத்து பிரதி நிதிகள் கலந்து கொள்ள இருக்கின்றனர், இக் கூட்டத்தில் யாப்புச் சீர் திருத்தம் அங்கீகரிக்கப்பட இருக்கிறது.

(உ-106)

# ஜூலை எதிர்ப்பு ஆர்ப்பாட்ட படுகொலை பற்றிய விசாரணை விரைவில் இடம்பெறும்

(கொழும்பு)

கொழும்பில் ஜூலை 19ஆம் திகதி நடைபெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது சுட்டுக்கொல்லப்பட்ட மஞ்சுள பிரசாத் என்பவரது தயாரும் அஜிந்கு ணரட்ண என்பவரின் மனைவியும் மேல் நீதிமன்றத்தில்தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு விசாரணைக்காக எடுக்கப்படலாம் என்று மேல் நீதிமன்ற நீதியரசர்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

மொத்தம் 20 மில்லியன் ரூபாவை பொலிஸாரிடமிருந்து நட்ட ஈடாககோரும் இம்மனு எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

எதிர் மனுதாரர்களாக பொலிஸ் மாஅதிபர், 2 பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், 2 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் கொட்டாஞ்சேனை, பேலியகொடை பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள், உதவி இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமைக்குஎதிராகநடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது மேற்படி இருவரும் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உவ)

# கலாசாலைக்கு சமுகமளிக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

பல்வேறு பாடசாலைகளிலும் தற்போது கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியமாணவர்களைஇறுதிப் பரீட்சைமற்றும்முதலாமாண்டுப் பரீட்சைவிண்ணப்பத்தில் ஒப்பமிடுவதற்காக எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை கலாசாலைக்குத் தவறாது சமுகமளிக்குமாறுகோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் எம். பரஞ்சோதி அறிவித்துள்ளார். (உ)

# எம். பிக்கள் விடயத்தில் பொலிஸார் தலையீட அனுரா அனுமதி மறுப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்லும் போதோ வெளியே வரும் போதோ பொலிஸார் தலையீடு செய்தலாகாது என்று சபாநாயகர் அனுரா பண்டார நாயக்கா பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் அவ்வாறான தேவை ஏற்படுமிடத்து தன்னிடம் முன்னனுமதிபெற வேண்டும்எனவும் அனுரா தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை 16 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குச் சென்ற எம். பிக்கள் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது தொடர்பாக அனுராவிடம் முறைப்பாடு செய்யப்பட்ட தற்கிணங்க இடம்பெற்ற விசாரணைகளின்பின் இப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (உ)

# இருளில் மூழ்கும் வீதி

[யாழ்ப்பாணம்]

கோப்பாய்- மானிப்பாய் வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்படாமையினால் இரவு வேளையில் அவ்வீதியூடாகச் செல்வோர் பெரும் சிரமப்படுகின்றனர்.

இவ்வாறு விளக்குகள் பொருத்தப்படாமையினால் வீதி இருளடைந்துகாணப்படுவதைக் கள்வர் சாதகமாகப் பயன்படுத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது. (உ-9)

# குளிக்கச் சென்றவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு

(மந்திகை)

தோட்டக் கிணற்றில் குளிக்கச் சென்றவர், கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் கடந்தவியாழனன்று கரணவாய் மூத்த விநாயகர் கோயிலுக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கரணவாய் மத்தியைச் சேர்ந்த சுந்தரம் பாலசிங்கம் (வயது-41) என்பவரே இவ்வாறு சடலமாகமீட்கப்பட்டவராவார்.

மரணம் தொடர்பானவிசாரணைகளை நடத்திய, வடமராட்சி திடீர் மரண விசாரணை அதிகாரி நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார். (உ-23)

# போதையில் சென்ற இளைஞன் பாதையால் வந்தவரைப் பலமாகத் தாக்கினான்

[ஈச்சமோட்டை]

மது போதையில் சென்ற இளைஞன், வீதியில் வந்து கொண்டிருந்தவரைப் பலமாகத் தாக்கிய சம்பவம் கடந்த சனியன்று மாலை 5.30 மணியளவில் கொழும்புத்துறை விதானையார்வீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மது மயக்கத்தில் வந்த இளைஞன் வீதியால் வந்த வலம்புரத்தைச் சேர்ந்த அலோசியஸ் (வயது-52) என்பவரை பாய்ந்து பலமாகத் தாக்கியதாகவும்,

இதை அறிந்த அயலவர்கள் அங்கு திரண்டு விபரீதம் ஏற்படாது தடுத்து சம்பந்தப்பட்ட இளைஞனைப் பலமாக எச்சரித்துவிட்டதாகத் தெரிய வந்துள்ளது.

(உ-59-110)

# திருட்டு முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்திய சாலை வெளி நோயாளர் பிரிவில் இளைஞர்ஒருவரால்மேற்கொள்ளப்பட்ட சங்கிலி அறுக்கும் முயற்சி ஊழியர்களால் முறியடிக்கப்பட்டது.

கடந்தசனிக்கிழமையோதிபப்பெண் ஒருவரின்சங்கிலியை ஓர் இளைஞர் அறுக்க முற்பட்டபோது ஊழியர் அவரைப் பிடிக்க முயற்சித்த வேளைசம்பந்தப்பட்ட இளைஞர் தப்பியோடி விட்டார்.

[செ-104]

# காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளுக்காக புதிய குழு வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து கடந்த 1996 - 1997 ஆம ஆண்டுகளில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை, தொடர்ந்தும் நடத்துவதற்கென விசேட புலனாய்வுக் குழுவின் புதிய குழுவொன்று வியாழனன்று யாழ். வரவுள்ளது.

ஐ.பி. சந்திரசேனா தலைமையிலான ஐவர் அடங்கிய இக் குழு, இம்மாதம் 5 ஆம் திகதி முதல் தமது விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதுடன், கடமையின் நிமித்தம் இங்கு ஒரு மாதகாலம் தங்கவுள்ளது.

இதேவேளை, கடந்த ஒரு மாதகாலமாக இங்கு தங்கியிருந்த கருணாநந்தரா தலைமையிலான குழு 30 கோவைகள் தொடர்பானவிசாரணைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது

(உ-10,9)

## சிந்தனைக்கு விருந்து

### பெயர்ந்து ஒளிக்கின்றோம்

''தங்கை கலியாணம் தாரும் பலலட்சம் உங்கள் கடமையி தென்''கின்றார் - ''இந்தப் படுந்துயர்நாம் சொல்லப் பயந்து கடன்பட்(டு) இடம்பெயர்ந் தேஒளிக்கின் றோம்.''

'பழையவன்'

### அமெரிக்க போர் விமானங்களால்

# இந்திய கட்சிகளிடையே குழப்பம்

# பிரதமர் வாஜ்பாய் விளக்கம்

[புதுடில்லி]

புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் அமெரிக்கப் போர் விமானம் தரித்துச் சென்றமை அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி உட்பட வேறு பல கட்சிகள் சந்தேகம் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரதமர் வாஜ்பாய் விளக்கம் அளித்துள்ளார்.

டில்லியில் தரையிறங்கிய விமானம் அமெரிக்கப் படை வீரர்களையும் பெருமளவிலான ஆயுதங்களையும் இறக்கிவிட்டுச் சென்றதாக வந்த செய்திகளை வாஜ்பாய் மறுத்துள்ளார். அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சும் மறுத்துள்ளது.

அமெரிக்காவின் கெர். டபிள்யூ.சி 130ரக இராணுவ விமானமொன்று 20 ஆயிரம் எடையுள்ள ஆயுதங்களையும் இராணுவத்தினரையும் டில்லியில் இறக்கி விட்டு சிங்கப்பூருக்குச் சென்றதாக ஒரு செய்தியும், எரிபொருள் நிரப்பத்தான் அமெரிக்க விமானம் பாலம் விமான நிலையத்திற்கு வந்து சென்றதாக இன்னொரு செய்தியும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

## சென்னை உயர் நீதிமன்றிற்கு வெடிகுண்டு அச்சுறுத்தல்

(சென்னை)

சென்னை உயர் நீதிமன்றிற்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டன;

உடனடியாக காவல்துறையினரும் வெடிகுண்டு நிபுணர்களும் மோப்ப நாய்களுடன் விரைந்து உயர்நீதிமன்ற வளாகத்தை தீவிர சோதனைக்கு உட்படுத்தினர்.

நீதிமன்ற வளாகம் துருவித்துருவி சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதும் வெடிகுண்டு எதுவும் மீட்கப்படவில்லை; [உ-2]

### ஹெலி விபத்து

# இந்திய விஞ்ஞானி கலாம் மயிரிழையில் தப்பினார்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமரின் பிரதம அறிவியல்ஆலோசகர் ஏ.பி.சி அப்துல்கலாம் சென்றஹெலிக்கொப்டர் விபத்தில் சிக்கியதில் அவர் மயிரிழையில் தப்பினார்.

அப்துல் கலாம் ஜார்க்கண்டில் நடை பெற இருந்த தொழில் நுட்பக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற சமயமே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

ஹெலிக்கொப்டரில் கோளாறு ஏற்பட்டதால் அவசர அவசரமாக பொக்காரா விமான நிலையத்தில் இறக்கப்பட்ட வேளை, தரையில் மோதிய போதும் அக்ஹெலிகொப்டரில் பயணம் செய்த அப்துல்கலாம் உட்படஐவரும் உயிர்தப்பினர்.

ஏ.பி சி:அப்துல் கலாம் அணுக்குண்டு தயாரிப்பில் முககிய இடம் வகித்தவர்என்பதும் பாரதஇரத்தினாவிருது பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது; (து)

## உலக தரிசனம்

### தீவிரவாதிகளுக்கு குவைத் நிதி தடுப்பு

(குவைத்)

எரிபொருள் வள நாடான குவைத்திலிருந்து தீவிரவாதிகளுக்கு நிதி சென்றடைவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அங்குள்ள வங்கியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துளளார்;

ஒஸாமா பின்லேடனுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் 27 அமைப்புக்கள, அறநிலையங்கள மற்றும் தனிப்பட்டவர்களின் கணக்குகளை முடக்குமாறு அமெரிக்கா ஏற்கெனவே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது; (எ-9)

### ஒஸாமா பின்லேடன்

# ஆப்கானிலே உள்ளதாக தலிபான் அரசு அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

பெயர் குறிப்பிடப்படாத இடத்தில், பாதுகாப்பாக பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இருக்கிறார் என்று தலிபான் அரசு அறிவித்துளளது.

இதனைப் பாகிஸ்தானிலுள்ள தலிபான் அரசிற்கான தூதுவர் அறிவித்தார்.

பின்லேடனின்பாதுகாப்புக் கருதியும் தலிபான் மக்களின் பாதுகாப்புக் கருதியும் மறைவானஓர்இடத்தில்வைக்கப்பட்டுள்ளார் என்றும்தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை ஒஸாமா பின்லேடன் பற்றிப் பேச்சு நடத்தலாமென்றும் அவர்கள்நிபந்தனையோடுகூடிய அழைப்பை விடுத்திருப்பதையும் தெரியப்படுத்தினார்.

இந்த அழைப்பை அமெரிக்கா அரசு முற்றாக நிராகரித்து விட்டதுடன் தலிபான் அரசு என்ன செய்யவேண்டும் என்பது பற்றி ஏற்கனவே அறிவித்தாகி விட்டது என்றும் வெள்ளை மாளிகை அறிக்கை தெரிவிக்கிறது. (து)

## ஜப்பானில் புதிய வகை தொலைபேசி அறிமுகம்

(ரோக்கியோ)

ஜப்பான் புதிய மொபொயில் தொலைபேசியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த புதிய நெடுந்தூரத் தொலைபேசி ஜப்பானின் ரோக்கியோ நகரில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இயங்கத் தொடங்கியுள்ளதாகவும் இது கைத்தொலைபேசி வகையில் புதியஅத்தியாயத்தை உருவாக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்தத்தொலை பேசிகளை முதலில் பாவனைக்கு எடுப்போர் எந்தவொரு இணையத்தளத்திற்குச் செல்லவோ மின்னஞ்சல்களை அனுப்பவோதொலைபேசியில்தன்னுடன் பேசுபவர்களுடைய படத்தைப் பார்க்கவோ முடியுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கைத் தொலைபேசிகள் கிட்டத்தட்ட 500 அமெரிக்க டொலர்களுக்கு விலையாகினு; (து)

### தாக்குதல் பீதி

# மனச் சஞ்சல மத்தியில் அமெரிக்க மக்கள்

(வாஷிங்டன்)

நியூயோர்க் மற்றும் வாஷிங்டன் நகரங்கள் மீது இடம்பெற்ற தாக்குதல்கள் காரணமாக அமெரிக்க மக்களில் 71 சதவீதமானோர் மன அழுத்தம் மற்றும் மனச்சஞ்சலத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

இத்தாக்குதலினால் பாதிக்கப்படாதவர்கள் எவரும் இருக்க முடியாது என வாஷிங்டன் பல்கலைக்கழக மனோவியல் பேராசிரியர் கரோல் நோர்த் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது:

மேற்படி தாக்குதலில் தங்களுக்கு நெருக்கமானவர்களை இழந்தவர்களும் தாக்குதல்களினால் ஏற்பட்ட அழிவுகளையும் இடிபாடுகளையும் ஒளிபரப்பின் மூலம் பார்த்தவர்களுமே இவ்வாறு மன அழுத்தத்தால் நித்திரையின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். (உ-3)

## தலைவர்கள் உரையாடல்

(வாஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் காலின் பவல் பாகிஸ்தான் அதிபர்ஜெனரல் முஷாரப்புடன் கடந்த சனிக்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தி உள்ளார்.

அமெரிக்க நகரங்கள் மீது இடம் பெற்றதாக்குதலின் விளைவுகள் பற்றியும் அமெரிக்கத் தரப்பு அடுத்து மேற்கொள்ள உள்ள நடவடிக்கை தொடர்பாகவும் பேசியுள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது. (க-02)

## இப்படியும் முடிவு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் வெளிநாடுகளில் வாழும் சிங்கப்பூர் பிரஜைகளின் வாக்குகளைச் சேர்ப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது;

அமெரிக்காவில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களை அடுத்து ஏற்பட்டுள்ள பாதுகாப்புக் காரணங்களை கருத்திற் கொண்டே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தற்காலிக திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது; (க-02)

## கோபிசந்திற்கு தேசிய விருது

(சென்னை)

இந்திய பட்மின்டன் வீரர் கோபிசந் இந்தியாவின் மிக உயரிய தேசிய விருதான 'ராஜீவ் காந்தி கே.ரத்னா' விருதைப் பெற்றுள்ளார்;

இவர் இவ்வாண்டு லண்டனில் நடைபெற்ற உலக பட்மின்டன் சம்பியன் பட்டத்தை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது;

(செ-2)

## ஜெயலலிதா வழக்கு ஆரம்பம்

(செனை)

ஜெயலலிதா மீது ஊழல் குற்றச்சாட்டில்வழங்கப்பட்ட தீர்ப்பை ரத்துச்செய்யக்கோரி தொடுக்கப்பட்ட மனு விசாரணை உச்ச நீதிமன்றில் நேற்று ஆரம்பமானது; (து)

## இந்திய அணியில் மீண்டும் கும்ளே

(சென்னை)

தென்னாபிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் செய்ய உள்ள இந்திய அணியில், சுழல் பந்து வீச்சாளர் அனில் கும்ளே நீண்டகால இடைவெளியின் பின்னர் இடம்பெற்றுள்ளார்;

தோளில் ஏற்பட்ட காயம் காரணமாக நீண்ட காலம் கும்ளே அணியில் விளையாடவில்லை என்பதும் இம்முறை தென்னாபிரிக்கா செல்லும் அணியில் இரு சுழல்பந்து வீச்சாளர்கள் கும்ளேமற்றும்கர்பஜன்சிங் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கும்ளே இடம் பெறாதுஇது வரை நடைபெற்ற பலகிரிக்கெற் போட்டிகளில் இந்திய அணிபெருமளவு வெற்றிகளை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது; [உ-2]

### விலகிச் செல்லும்

## கட்சிகளை உள்ளீர்க்க ஜெயலலிதா முயற்சி

(சென்னை)

தமிழ் மாநில மாக்கிஸ்ட் கம்யூனிஸ்டுகள் அ.இ.அ.தி மு.க கூட்டணியிலிருந்து விலகிச் செல்லாதிருப்பதற்காக செல்வி ஜெயலலிதா அதன் தலைவர்களைச் சந்தித்து வருகின்றார்;

கடந்த சட்டமன்றத் தேர்தலை யடுத்துகூட்டணிக்குள் நெருக்கம் குறைந்து வருவதனால், இடதுசாரிகளுக்கும் அ.இ.அ.தி மு.கவிற்கு மிடையில் உள்ளூராட்சித்தேர் தல் உடன்பாடு கிட்டாத நிலையில் ஜெயலலிதா அக்கட்சிகளின்தலைவர்களைச்சந்தித்து வருகின்றார்; (து

### அமெ. தாக்குதல் பாணியில்

# இந்தியாவைத் தாக்கப் போவதாக ஜேசி முகமட் இயக்கம் அச்சுறுத்தல்

(புதுடில்லி)

ஜம்முகாஷ்மீரிலுள்ள ஜேஸி முகமட் இயக்கம் அடுத்த 48 மணித்தியாலயத்தில் அமெரிக்கா போன்ற தாக்குதலை இந்தியாவில் செய்யப் போவதாக அறிவித்துள்ளது,

ஜேஸி முகமட்அமைப்பு பாகிஸ்தான் ஆதரவுடைய ஒரு பயங்கரவாத அமைப்பாகும்;

இது இந்தியாவிற்கு விடுத்துள்ள அச்சுறுத்தலைஅடுத்து இந்திய விமான நிலையங்கள் அரச,உயர்கட்டடங்கள், துறைமுகங்கள் முதலியவற்றிற்கு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளன.

இந்த இயக்கத்தின் அச்சுறுத்தலை இந்திய பாதுகாப்பு அமைச்சும், மற்றும் வெளிவிவகார அமைச்சும் துரிதமாகச் செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது;

இதேவேளை, நேற்றைய செய்திப்படி பாகிஸ்தான் தனது நாட்டிலுள்ள பயங்கரவாத அமைப்புகளைத் தடைசெய்துள்ளதாக அறிவித்திருக்கிறது; (து)

வெள்ளத்தனையமலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு
குறள்

வலம்புரி

## புனர்வாழ்வு தேவை!

யாழ்ப்பாணக் குடாநாட்டில்இடம்பெற்ற மிதிவெடிகள் ஷெல் தாக்குதல்கள், விமானக் குண்டுத் தாக்குதல்கள் போன்றவற்றால் தமது அங்கத்தை இழந்து கண்ணீருடன் வாழ்க்கைநடத்துவோரின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கைதாண்டிவிட்டது.

இதில் கால் இழந்தவர்களே அதிகம். அதிலும் மிதிவெடியால் கால்களை பறிகொடுத்தவர்களின் நிலை பெரும் பரிதாபத்திற்குரியது

யுத்தத்தின் கொடூர தாண்டவம் அவர்களுக்கு வழங்கிய பரிசுஅது. இன்று வேதனையோடு - துன்பத்தோடு பிறரைப் போல் இருந்த எனக்கு ஏன் இந்த நிலை என்ற மனச்சுமையோடு அவர்கள் நடமாடுகின்றனர். அவர்களின் துன்பச் சுமையால் நிலமகள் கூட தானும் ஒரு வகையில் காரணமாயிற்றேன் எனப் புலம்பியிருப்பாள். ஆனால் யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச- அரசசார்பற்ற அமைப்புகள் அங்கத்தை இழந்தவர்களின் வாழ்க்கைக்குவேண்டிய ஆதாரங்களைசெய்து கொடுக்க முன்வராதது வேதனைக்குரியது.

எனினும்யாழ்ஜெய்ப்பூர் செயற்கைக்கால்நிறுவனம் இக்கட்டான சூழ்நிலையிலும் தனதுபணியைஇடையறாது ஆற்றி வருகின்றது இதன் சேவையால் கால் இழந்தவர்களும் இம்மண்ணில் காலூன்றி நிற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதேநேரம் இவர்களில் இளம் வயதினர் தொழில்வாய்ப்புக்கிடைக்காத நிலையில் ஏக்கப் பெருமூச்சுடன் தமது வாழ்க்கைப் பயணத்தின் தூரத்தை நோக்குகின்றனர். உதவும் கரங்கள் அணைக்கும் உள்ளங்கள், ஏன் தங்குமிடங்கள் கூடத் தெரியவில்லை. இச் சூழ்நிலையில் யுத்தத்தால் அங்கம் இழந்தவர்களுக்கு உதவுவது இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். குறிப்பாக வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இவர்களுக்கான சுயதொழில் வாய்பபுகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன்மாநகர சபை, பிரதேச சபைகள் அங்கம் இழந்தவர்களுக்கு பொருத்தமான நியமனங்களை வழங்க முன்வரவேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகள் அங்கம் இழந்தவர்களின் அமைப்பான யாழ். ஜெய்ப்பூர்அவய பாவனையாளர் சங்கத்தினூடாக மேற்கொள்ளப் படுவது நன்று. இது காலத்தின் தேவையாகும்.

# ஜீரணம் குளுக்கோஸை உருவாக்க வேண்டும்

# இன்சுலின் நீரிழிவு நோயைக் குணப்படுத்தாது

(சென்ற வாரத் தொடர்ச்சி)

முதல் முறையாக நமக்கு ஜீரணக் கோளாறு ஏற்படுவது, சர்க்கரையின் மூலம் தான். முதன் முறையாக நாம் எப்போது இனிப்புப் பண்டங்களை நமது குழந்தைகளுக்குக் கொடுக்க ஆரம்பிக்கிறோமோ, அப்போது தான் அந்தப் பிஞ்சுக் குழந்தைகளின் குடல் இயக்கத்தை, ஜீரண சக்தியைப் பாழாக்கும் நஞ்சைச் செலுத்துகிறோம் என்பதில் அணுவளவும் சந்தேகம் கிடையாது.

பிறகு தான் ஊட்டச் சத்துக்கள் இரத்தத்தில் கலக்க ஆரம்பிக்கின்றன: நமக்குத் தெம்பும் கிடைக்கிறது.

மேற் சொன்ன முறையில் தான் நாம் ஊட்டச் சத்தினைப் பெறுகிறோம் என்று சொன்னால், சாதாரணமாக பசியின் கொடுமையினால் வாடிவதங்கி இருக்கும் ஒரு மனிதனுக்கு. ஒரேயொரு கவளம உணவானது நாக்கில் பட்ட அடுத்தகணமே புத்துயிர் பெறுவதை உணர்கிறானே இது எத்தகையசக்தி எவ்விதம் கிடைக்கிறது என்

## மருத்துவ விளக்கம்

ஜீரணத்தின் வாயிலாகக் கிடைக்கப் பெறும் குளுக்கோஸ் உடலுக்கு உகந்ததாகும்; ஏற்புடையதாகும்: அலர்ஜியையோ அஜீரணக் கோளாறுகளையோ தோற்றுவிக்காது. குளுக்கோஸ், விற்றமின்கள், புரதச் சத்துக்கள், ஊட்டச் சத்துக்கள் போன்ற வியாபார ரீதியாகத் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் அனைத்தும் இதற்கு மாறான அத்தனை கோளாறுகளையும் ஏற்படுத்தக் கூடியதாக உள்ளன. ஜீரண உறுப்புக்களில் மிக முக்கியமான உறுப்புக்கள், மண்ணீரலும், கல்லீரலும் ஆகும். இவ்வுறுப்புக்களின் முக்கியத்துவத்தை இப்போது தெரிந்து கொள்வது அவசியம்.

பதை ஆங்கில மருத்துவம் தெளிவுபடுத்தவேண்டும்: அம்மருத்துவத்தின் பதிலுக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை, நீரழிவு நோய்க்கான காரணம், அதற்கான சிகிச்சை மேற் சொன்ன கேள்விகளுக்கு கிடைக்கப்பெறும் பதிலில்தான் அடங்கியுள்ளன.

மண்ணீரல் வயிற்றோடு ஒட்டிக் கொண்டிருக்கும், வயிற்றோடு சம்பந்தப்பட்ட மிக நெருக்கமான ஒரு உறுப்பாகும்.பசி, தாகம், வயிற்றில்

காரணமாக அமைந்து விடுகிறது:

மண்ணீரலானது. நமது உடல் உழைப்புக்குத் தேவையான சக்தி குறையும்போது அதனை ஈடு செய்ய பசியைத் தூண்டுகிறது. ஆனால் அது தன் இயக்கத்தில் சோர்வடையும் போது வயிற்றுக்குள் சென்ற உணவிலிருந்து உடனடியாகக் கிடைக்கும்சக்தியைக் கிரகிக்க முடியாமல் போகிறது. இதனால் பசியானது சீக்கிரமே அடங்குவதில்லை. சாப்பிடும் அளவு அதிகமாகி வயிறுமுட்ட உட்கொள்பவர்கள் மண்ணீரலின் சோம்பலினால் நோய்க்கு ஆளாக ஆரம்பிக்கிறார்கள் எனத் திட்டவட்டமாகக் கூறலாம். இந்த நிலையில் ஜீரணத்தின் முடிவில் உணவுப் பொருட்கள் ஊட்டச்சத்துகளாக மாற்றப்படும் பொழுது அவற்றின் தரம் வெகுவாகக் குறைந்து விடுகிறது. ஊட்டச் சத்துக்களில் முதன்மையானது குளுக்கோஸ் என்னும் எரிபொருளாகும்: தரம் குறைந்த ஊட்டச் சத்துக்கள் உடல் திசுக்களால் நிராகரிக்கப்படுகின்றன. செல் அணுக்களால் உபயோகப் படுத்தப் படாமல் அவற்றிற்கு வெளியே தங்கும் இந்த ஊட்டச்சத்துக்கள் தால் ஊளைச்சதைத் தோற்றத்தைக் கொடுக்கிறது. உடற்

லில் உபயோகப்படுத்தக்கூடிய உறுப்பு கணையமே ஆகும்: இந்தச் சக்தி கிடைக்கப் பெறாத வரையில் கணையத்தின் இயக்கம் தூண்டப் பெறாது. அடுத்ததாக ஜீரண உறுப்புகளின் வழியாக நடைபெறும் ஜீரணத்தின் தரமும் பாதிக்கபபடுவதல் ஊட்டச் சத்துக்களும் உபயோகமற்றவையாக மாறுகின்றன. ஊட்டச் சத்துகளில் ஒன்றான (உடல் உழைப்புக்கு எரிபொருளாக உபயோகப்படும்.) குளுக்கோஸின் தரமும் தாழ்ந்து விடுகிறது,

இரத்த ஓட்டத்தில் கலந்திருக்கும் குளுக்கோஸ் நமது செல் அணுக்களில் சக்தியாக மாற்றபபட்டு உடல் உழைப்புக்காகஉபயோகப் படுத்தப் பட வேண்டுமென்றால், முதலில் கணையம் தூண்டப்பட வேண்டும். அதன் பின்னர் அதன் சுரப்புநீர் (இன்சுலின்) சுரக்கப்படவேண்டும் பான்க்ரியாஸ் தூண்டப்படவேண்டுமெனில முதலில் பான்க்ரியாஸ் உறுப்பானது முழுமையான இயக்கநிலையில் இருக்க வேண்டும்: இதற்குத் தேவையான சக்தி வயிற்றை வந்து அடையும் உணவுப் பொருளில் உள்ள உடனடியான சக்தியாகும்.

மண்ணீரல் சிறப்பான

சென்னை டாக்டர் சகோதரர்கள்
சித்திக் ஜமால் M. B.B S., D, C. C; H; M; D; (Acu)
பஸ்லூர் ரஹ்மான் M. B. B. S, M R,S H (Lon)

### மண்ணீரல்

வயிற்றுக்கு ஜீரணிக்கும் திறனைக் கொடுப்பதே மண்ணீரல் தான்; பசியை உருவாக்குவதும், கட்டுப்படுத்துவதும் மண்ணீரல் தான்; ஆங்கில மருத்துவ முறைப்படி நாம் இதுவரையில் தெரிந்து வைத்திருப்பது என்னவெனில், உணவு உட்கொண்ட பின், அந்த உணவானது, இரண்டரை மணி நேரம் வயிற்றில் தங்கி ஜீரணிக்கின்றது. மூன்று மணி நேரத்துக்குப் பிறகு சிறு குடலுக்குள் இறங்குகிறது. சிறு குடலில் மேலும் உணவுப் பொருள்கள் சிறு சிறு அணுக்களாகப் பிரிக்கப் பட்டும், சேர்க்கப்பட்டும், ஊட்டச் சத்து மிக்க திரவப் பொருளாக மாற்றப்படுகிறது; இந்தத் திரவப் பொருள் உற்பத்தியானது குறைந்தது நாலரை மணி நேரத்திலிருந்து ஐந்து மணி நேரம் வரை சிறுகுடலில் மட்டுமே ஜீரணம் நடை பெற்றாக வேண்டும். சிறுகுடலிலுமாகச் சேர்த்து குறைந்தது ஆறு மணி நேரத்திலிருந்து எட்டு மணி நேரம் வரையிலான ஜீரணத்திற்குப்

நடைபெறும் முழுமையான ஜீரணம் ஆகியவற்றுக்கு மூல காரணமே மண்ணீரல்தான். இதுமட்டுமல்ல, இரத்தத்தை சுத்திகரித்து, இரத்த ஓட்டத்தை நடைமுறைப்படுத்தும் முக்கியமானவேலையைச் செய்கிறது.

நமது உழைப்புக்குத் தேவையான எரிபொருள், அதாவது குளுக்கோஸ் இரத்த ஓட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு இருந்தாக வேண்டும். அந்த அளவு குறையும் போதுதான் நமக்குப் பசி ஏற்படுகிறது. உணவானதுவயிற்றைஅடைந்தவுடன் அவ்வுணவிலுள்ள உடனடியாகக் கிடைக்கக் கூடியசக்தியை கிரகிப்பதில் முதன்மையான பங்குவகிக்கிறது மண்ணீரல், மண்ணீரலின் செயல் திறன் குறையும் போது, இந்த சக்தியானது கிரகிக்கப்படாமல் வயிற்றிலேயே தேங்குகிறது; கெட்டவாய்வுச் சக்தியாக மாறுகிறது. மேலும் நன்றாகப் பசிக்கும் ஒருவருக்கு உணவை உட்கொள்ள முடியாமை அடிக்கடி ஏப்பம் வருதல், நெஞ்சு கரிப்பு போன்றவை ஏறபடுவதற்கும் மண்ணீரலின் இயக்கக் குறைவே

பருமனுக்கு வழிவகுக்கிறது: இவ்வாறாக மண்ணீரல் சோகை இரண்டு விதங்களில் உணவின்மூலம் நமக்குக் கிடைக்கக்கூடிய சக்தியை வெகுவாகப் பாதிக்கிறது. அதாவது வயிற்றிலிருந்து கிடைக்கக்கூடிய உடனடியான சக்தியைக் கிரகிப்பதில்லை. இதன் காரணமாக மற்ற ஜீரண உறுப்புகளுக்கும் சக்தி குறைவினால் சோர்வு ஏற்படுகிறது. இது வயிற்றிலிருந்து சிறு குடலுக்குள் இறங்கும் உணவின் அஜீரணத்திற்கு வழி வகுக்கிறது. முடிவில் ஊட்டச்சத்துக்களின் தரம் மிகவும் குறைந்து விடுகிறது.

மண்ணீரலுடன் இணைந்து இயங்கும் மற்றுமொரு உறுப்பு கணையம் (பான்க்ரியாஸ்) ஆகும். மண்ணீரலின் இயக்கம் சீராக இருக்கும் பட்சத்தில் அது வயிற்றிலுள்ள உணவிலிருந்து கிரகிக்கக்கூடிய உடனடியான சக்தியை முத

முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் வரையில் தான் கணையத்திற்கு இந்த இயக்கச் சக்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது: மண்ணீரலில் ஏற்படக்கூடிய சோர்வு, அதே வேளையில் கணையத்தையும் பாதிக்கிறது: மண்ணீரலின் இயக்கத்தை பாதிக்கிறது: மண்ணீரலின் இயக்கத்தைத் திரும்பவும சீர்படுத்தும் வரையில், கணையத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பைத் தவிர்த்து விடமுடியாது. இதுவே பான்க்ரியாஸ் உறுப்பின் இயக்கக் குறைவுக்கு பிரதான காரணமாகும் ஆக மண்ணீரல்இயக்கம் முழுமையாக பாதுகாக்கப் படுமேயானால், பிற்காலத்தில் ஏற்படப் போகும் நூற்றுக் கணக்கான வியாதிகளிலிருந்தும் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளலாம் இவற்றில் ஒன்றே நீரிழிவு நோயாகும்.

(தொடரும்)

## தினசரி தியானம்

### பாய் மரம்

ஆழித்துரும் பெனவே அங்குமிங்கும் -உன்னடிமை
பாழில் திரிவதென்ன பாவம் பராபரமே.

- தாயுமானவர்

பிரபஞ்ச வாழ்வு என்னும்கரை காணாக்கடலிலேஎனக்குக் கப்பல் போன்று இருப்பவர் தாமே;

கடலில் சென்ற கப்பலின் பாய் மரத்தில் பறவையொன்று உட்கார்ந்திருந்தது. ஒரேஇடத்தில் எவ்வளவு நேரம் இருப்பது என்று எண்ணிய பறவை புறத்தே பறந்து போனது. எங்கு சென்றும் உட்காரக் கடலில் இடம் கிடைக்கவில்லை. பழைய படி பாய் மரத்துக்கே வந்து விட்டது. கடவுள் நமக்கு அப் பாய் மரம் போன்றவர்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

## தமிழ்நாட்டில் வாழ்வோர் தாயகம் திரும்ப விருப்பம்

(யாழ்ப்பாணம்)

தற்போது தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் 150இற்கும் அதிகமான இலங்கைத் தமிழர் குடும்பங்கள் மீண்டும் தாயகம் திருப்பி வருவதற்கு விரும்பி அமைச்சர் கே.என்: டக்ளஸ்தேவானந்தாவிடம் தொடர்பு கொண்டுள்ளதாகஈழமக்கள் ஜனநாயகக்கட்சி விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களானஇவர்கள் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட பதட்ட நிலை மற்றும் பயம் என்பன காரணமாக தமிழ்நாட்டுக்குஇடம் பெயர்ந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

## பாலம் திருத்தம் பூர்த்தி

(இருபாலை)

கொக்குவிலில் உள்ள அம்பட்டன் பாலம் கடந்த ஒரு மாதகாலமாகத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப் பட்டதால் போகுவரத்திற்கு அனுமதிக்கப்படாது மூடப்பட்ட நிலையில் இருந்தது.

இப்போது அப்பாலம் செப்பனிடும் வேலைகள் பூர்த்தியாகி வாகனப் போக்குவரத்திற்காக திறந்து விடப்படவுள்ளது; (எ-221)

# ஜம்முகாஷ்மீரில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்

## அவை உறுப்பினர் நால்வர் உட்பட 34பேர் பலி!

(காஷ்மீர்)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மாநிலங்கள் அவை கட்டடத்திற்கு முன்னால் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் 30பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாநிலங்கள் அவையில் அவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை கார் ஒன்றில் வந்த இரு இளைஞர்கள் மாநிலங்கள் அவைக்கு அருகிலுள்ள கட்டடம் ஒன்றின்மீது காரை மோதி குண்டை வெடிக்க வைத்து தாமும் தற்கொலை செய்து கொண்டனர்.

இச்சம்பவத்தில் பலர் உடல் சிதறிப் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர். இவர்களில் படுகாயமடைந்த பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மாநிலங்கள் அவைக் கூட்டம் ஒன்றை முற்றுகையிட்ட தாக்குதல்காரர்கள் அங்கு நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மாநிலங்கள் அவை உறுப்பினர்கள் நால்வர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். தாக்குதல் நடப்பதற்கு சற்று முன்னர் காஷ்மீர் முதலமைச்சர் பாரூக்அப்துல்லா அங்கிருந்து சென்று விட்டதாகவும் பிறிதொரு தகவல் தெரிவிக்கின்றது. (ந- 5)

## மீனவர்கள் கரைதிரும்பினர்

(மந்திகை)

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று முன்தினம் மீன்பிடி உபகரணங்களை மீட்பதற்காக சென்றசமயம்காணாமல் போன மூன்று மீனவர்களும் நேற்றுக்காலை கரை திரும்பியுள்ளனர்.

கரைதிரும்பிய மூவரும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். (ந-4.23)

## சபாநாயகர் நாளை சந்திப்பு

[கொழும்பு]

சபாநாயகர்அனுரா பண்டாரநாயக்க தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பொன்றை நாளைக் காலை நடத்தவுள்ளார்.

பாராளுமன்றக் கட்டிடத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பின் போது அரசின் நிர்ணய சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் தொடர்பாக அவர்களின் ஆலோசனைகளைப் பெறவுள்ளார். (வ

### வளைகுடா

யோகமும் தடைப்படும் ஆனால் இதனைப்பற்றி அரசு சிந்தித்ததாகத் தெரியவில்லை.

எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள 9 எண்ணெய் தாங்கிகளில் 5 தாங்கிகளே பயன்படுத்தப்படுகின்றன. இலங்கைக்குத் தேவையான எரிபொருளில்ஒருமாதத்திற்குப் போதுமான அளவே கையிருப்பிலுள்ளது. எனவே அரசு இதனை கவனத்திலெடுத்து செயற்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ந-5)

# பெற்றோர்களை கைது செய்தால் பிள்ளை புலிகளுடன் சேருவார்கள்

## அமைச்சர் பட்டிவீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகியவற்றின் கீழ் கணவனும் மனைவியும் கைது செய்யப்படும் போது அவர்களது பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு எவரும் முன்வராததனால் அவர்கள் அனாதை விடுதிகளையோ அல்லது விடுதலைப்புலிகளிடமோ போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இதனை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இவ்வாறு தொல்லைதவிர்ப்புக்குழுத்தலைவரும் அமைச்சருமான பட்டிவீரக்கோன் தெரிவித்துள்ளார்.

தொல்லைதவிர்ப்புக் குழுக் கூட்டம் நேற்று அமைச்சர் பட்டிவீரக்கோன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த இரா. சம்மந்தன், புளொட் அமைப்பைச்சேர்ந்த தர்மலிங்கம் சித்தார்த்தன், மற்றும் எம். எ. சுபையிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் பட்டிவீரக்கோன் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகியவற்றின் மீது ஒரு குடும்பத்தில் கணவர் கைது செய்யப்பட்டால் மனைவியை கைதுசெய்வது தொடர்பாக தீர விசாரித்தே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

வவுனியா, கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு தம்பதிகள் இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### பிரதிநிதியை...

சுந்தரலிங்கத்தை அல்லது சட்டக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் வி. ரி. தமிழ்மாறனை நியமிக்கலாம் என்ற ஒத்தகருத்துகாணப்படுவதாக தமிழ்க்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசின் நிர்ணய சபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பேராசிரியர் க. சிற்றம்பலத்தை நியமிக்க விருப்பம் தெரிவித்துள்ள அதேவேளை பேராசிரியர் சிற்றம்பலம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபை உறுப்பினராக இருப்பதால் அவரது நியமனத்தை ஏற்க முடியாதென சில தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஈ.பி.டி.பி. அமைப்பு கலாநிதிவிக்கினேஸ்வரனை நியமிக்க இருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கின்ற போதும் கலாநிதி விக்கினேஸ்வரன் ஈ.பி.டி.பியின் எம்பியாக இருந்தமையால் அவரும் அரசியல் நிர்ணயசபைக்கு ஏற்புடையவரல்லர் என்றும் தமிழ்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் சட்டக்கல்லூரி விரிவுரையாளர் வி.ரி. தமிழ்மாறன்அரசியல்நிர்ணய சபையில் அங்கத்துவம் பெற விரும்பவில்லையெனக் கருத்து வெளியிட்டிருப்பதால் ஓய்வு பெற்ற நீதியரசர் ரி. சுந்தரலிங்கம் தமிழ்க் கட்சி சார்பில் நியமனம் பெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் கட்சிகளின் சார்பில் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் [ரவூப் ஹக்கீம் அணி] கலாநிதி சட்டத்தரணி பயஸ் முஸ்தாவை நியமிக்கவிருப்பதால் இவரது நியமனத்தை ஏனைய முஸ்லிம் கட்சிகள் எதிர்க்கமாட்டா என்று தெரிவிக்கப்படுகிறது.

மலையக மக்கள் சார்பில் சட்டத்தரணி ராதா கிருஷ்ணனை அரசியல் நிர்ணய சபைக்கு சிபார்சு செய்ய இ.தொ.காவும் பிறகட்சிகளும் முடிவு செய்துள்ளதாக மலையக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க அரசியல் நிர்ணய சபைக்கு 10 பேரை நியமிக்க ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் செயற்குழுக்களும், அதிஉயர் அரசியல்பீடமும் பாராளு மன்றக் குழுக்களின் கூட்டங்களும் நாளை புதன்கிழமை காலை தொடக்கம் மாலை வரை நடைபெறவுள்ளது. [வ]

# மாதவராவின் மறைவுக்கு ஈ.பி.ஆர்.எல்எவ் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவர் மாதவராவ் சிந்தியா அகால மரணமான செய்தி எமக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த துக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஈ.பி.ஆர். எல் எவ். வரதரணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் த.சுபத்திரன்நேற்று விடுத்த அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

### வன்னிக்கான

வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்தில் நடாத்தப்பட்ட முதியோர் தினவிழாவிலேயே கிளிநொச்சி அரச அதிபர் எஸ் ஐயாத்துரைமேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு நடைபெற்ற முதியோர் தினவிழாவில் அரச அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னியில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளைப் பூரணமாக நிவர்த்தி செய்யமுடியாத நிலை உள்ளது. இப்பகுதி விடுவிக்கப்படாத பகுதி எனக் காரணம் காட்டி இங்கு வழங்கப்பட்டு வந்த உதவிகளை அரசாங்கம் நிறுத்தி விட்டது என்று கூறினார் (வ)

### முல்லைக்---

கப்பட்டுள்ளது,

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு ஆயுதக் கப்பல் வந்து கொண்டிருப்பதாக வெளிநாட்டு புலனாய்வுப்பிரிவொன்று இலங்கைபுலனாய்வுப் பிரிவை எச்சரித்திருந்தது.

இதனையடுத்து கடந்த மாதம் 23ம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பில்கடற்படையினருக்கும், கடற் புலிகளுக்கும் இடையே மோதல் இடம் பெற்றது.

இம் மோதல் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் போதே கடற் புலிகளின் பாதுகாப்புடன் ஆயுதக்கப்பல் முல்லைதீவுக் கடற் பரப்பில் தரித்து நின்று ஆயுதங்களை இறக்கி விட்டு சென்றுள்ளது.

கடற்படையினரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வேகமாக சென்று மறைந்த கப்பல் ஆயுதக் கப்பல் தான் எனவும் அக்கப்பல் ஆயுதங்களை இறக்கிவிட்டு திரும்பிச் செல்கையிலேயே அவதானிக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் நம்பப்படுகிறது (இ)

## மரண அறிவித்தல்

திருமதி
**கந்தையா இராசம்மா**
[வாரிவளவு காரைநகர்]

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி கந்தையா இராசம்மா 28-09-2001 வெள்ளிக்கிழமை அன்று காரைநகரில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற அம்பலவாணர் சோமு, தங்கமுத்து தம்பதிகளின், அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கோவிந்தர் தங்கமுத்தாள் தம்பதிகளின் அன்புமருமகளும். கோ. கந்தையா(முன்னாள் வர்த்தகர் பாணாந்துறை,தங்கொட்டுவ) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஞானப்பிரகாசம் பாக்கியம், காலஞ் சென்றவர்களான கனகரட்ணம் (மலேசியா), வேலுப்பிள்ளை(மலேசியா) தர்மலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் றோயல்கல்லூரி கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. விஜயரட்ணம் [கனடா], சிவலிங்கம், சுந்தரலிங்கம் [வவுனியா], கனகலிங்கம் [பொறியியலாளர் அவுஸ்ரேலியா], கனகேஸ்வரி, சண்முகலிங்கம் [பொறியியலாளர் UK], ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகௌரி, சந்திராதேவி, ஞானவதி, [கணக்காளர் அவுஸ்ரேலியா], குணரட்ணம் [குகன் ஸ்ரோஸ் யாழ்ப்பாணம்], சாந்தி [ UK ] ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வினோதினி, பிரகாஷ், நவகரன், கோகுலன், ஜனகன், இளமாறன், மதிவதனா, தர்சனா, கார்த்திகா, யமுனா, தயாநிதி செந்தூரன், குகவதனா, திருக்குமரன், திருவரங்கன், திருமுருகன், சரவணன், சாம்பவி, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திருமதி விஜயரட்ணம் (விமலாதேவி)யின் சிறிய தாயாரும், சரஸ்வதி (அவுஸ்திரேலியா) காலம் சென்றவர்களான ஆறுமுகம் (பென்ரம்மலேசியா), முத்தையா, மீனாட்சிப்பிள்ளை, சுந்தரம்மா, ஞானப்பிரகாசம் (ஆயுள் வேதவைத்தியர்), மோகனாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02-10-2001 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் இல:119 இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
கோ. கந்தையா.
(கணவர்)

இல: 119, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(சி 2671)


காலத்தால் அழியாத கற்பனைக்கு எட்டாத தங்க வைர நகைகளுக்கு



நிருத்திகா ஜுவலர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T. P. 021 - 2694

(இ 2367)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.